# தமிழ் இலக்கிய நயம்
## முதலாம் தவணையை அடிப்படையாகக் கொண்ட
## பாட அலகுகளின் வினா விடை
## தரம் 10

தொகுப்பாசிரியர் – இரா. நிஷாந்தன்
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

### புத்தகசாலை – அலகு – 01

**01. புத்தகசாலை எனும் கவிதையின் ஆசிரியர் யார்?**

→ பாரதி தாசன்

**02. பாரதி தாசனின் இயற் பெயர் என்ன?**

→ கனக சுப்புரத்தினம்

**03. பாரதிதாசனின் படைப்புக்கள் எவை?**

→ வீரத்தாய், பாண்டியன் பரிசு, போர் மறவன், இருண்ட வீடு

**04. தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தனிலே..**

அ. சையோகம் என்பதன் கருத்து யாது?

→ இணைந்திருத்தல்

ஆ. கவிஞர் எதனுடன் சையோகம் புரிந்ததாக கூறுகின்றார்?

→ புத்தகத்துடன்

**05. மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும் மனோபாவம்
வானைப் போல் விரிவடைந்து..**

அ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?

→ உவமையணி

ஆ. மனிதர் எதனை காண வேண்டும் என கவிஞர் விரும்புகின்றார்?

→ அன்பு நெறி

**06. புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை
வேண்டும் நாட்டில் யாண்டும்..**

**அ. புத்தகசாலையால் எத்தகு வாழ்வு கிடைக்கின்றது?**

**→ தூய்மையான புது வாழ்வு**

**ஆ. யாண்டும் என்பதன் கருத்து யாது?**

**→ எங்கும், எல்லா இடமும்**

**07. தமிழர்க்கு தமிழ் மொழியில் சுவடிச்சாலை
சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்..**

**அ. சுவடிச்சாலை என்றால் என்ன?**

**→ புத்தகசாலை, நூலகம்**

**ஆ. சர்வகலாசாலை என்றால் என்ன?**

**→ பல்கலைக்கழகம்**

● **கட்டமைப்பு வினாக்கள்**

**08. கவிஞர் நாட்டில் புத்தகசாலை எங்கும் வேண்டும் எனக் கூறுவதன் காரணங்கள் யாவை?**

**கவிஞர் பாரதிதாசன் புத்தகசாலை நாட்டில் எங்கும் அமைத்திருக்க வேண்டும் என விரும்புகின்றார். அதற்கான காரணங்களை நோக்கும் போது,**

**→ மனிதர்கள் அன்பு நெறி காண்பதற்கும்,**
**→ மனிதரது மனோபாவம் விரிவடைவதற்கும்,**
**→ எம்மிடம் உள்ள சுயநலம் எனும் இருள் அகலவும்,**
**→ சகல மக்களும் ஒன்றென உணர்வதற்கும்,**
**→ எம்மிடையே உயர் எண்ணங்கள் வழங்கிடவும்**
**→ மக்கள் தூய்மையடைந்து புது வாழ்வு வேண்டுவதற்கும்**

**என்பவற்றிற்காக புத்தகசாலை நாட்டிலே எங்கும் அமைய வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்.**

**09. கவிஞர் காண விளைகின்ற புத்தகசாலை எத்தகையது என்பதை விளக்குக?**

**→ தமிழ்ர்க்கு என தமிழ் மொழியில் தனியாக புத்தகசாலை அமைந்திருக்க வேண்டும்.**

**→ அங்கு பிறமொழி நூல்கள் எல்லாம் மொழிபெயர்த்து அமைந்திருத்தல் வேண்டும்**

**→ கவிதை நூல்கள், உரைநடை நூல்கள் என்பன துறை துறையாக அடுக்கபட்டிருக்க வேண்டும்.**

**→ அழகிய செய்தித்தாள்கள் பலவும் குவிந்திருக்க வேண்டும்.**

**→ விரும்பும் நூல்கள், புதிய நூல்கள் என பலவகையான புத்தகங்களும் அடுக்கி வைத்திருத்தல் வேண்டும்**

**10. புத்தகத்தினை நாடி வருவோரை எவ்வாறு நடாத்த வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்?**

**புத்தகம் ஒன்றினை வாசிப்பதற்கு நம் இல்லம் நாடி வருவோரை எவ்வாறு நடாத்திட வேண்டும் எனக் கவிஞர் பின்வருமாறு கூறுகின்றார்.**

**→ வாசிக்க வருவோரின் வருகையை ஏற்று மரியாதையுடன் வரவேற்க வேண்டும்.**

**→ அவர்கள் அமர்வதற்கு ஆசனம் கொடுக்க வேண்டும்**

**→ அவர்கள் விரும்பும் நூல்களை அவர்களுக்கு கொடுத்திட வேண்டும்**

**→ புதிய நூல்கள் வந்திருந்தால் அது பற்றி உரைத்திட வேண்டும்.**

**11. பின்வரும் தொடர்களின் இலக்கியச் சிறப்பினை நயந்து விளக்குக?**

**☞ <u>அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்</u>**

**இத் தொடரில் கவிதை நூல்களின் சிறப்பு காட்டப்படுகின்றது. அமுதம் என்பது இனிமையானது. அது கிடைப்பதற்கு அரிதானது. ஆக அந்த அமுதத்தைப் போல இனிமையானது அந்த கவிதை நூல்கள் என்பதை உவமையணியின் மூலம் கவிஞர் கூறுகின்றார். மேலும் செந்தமிழில் அமையப் பெற்றவை அக் கவிதை நூல்கள் என்பதையும் காண முடிகின்றது.**

**☞ <u>மகாசோதியிற் கலந்ததெனது நெஞ்சம்</u>**

**இவ்வடியினில் கவிஞரின் பரவச நிலை காட்டப்பட்டுள்ளது. அதாவது புத்தக வாசிப்பில் ஈடுபட்டிருந்த கவிஞர் நெஞ்சமானது மனிதர்களில் மிக உயர்ந்த கவிஞர்களின் உள்ளத்து பேரொளியுடன் சென்று கலந்து விட்டது என்பதன் ஊடாக கவிஞர் உள்ளம் பிற கவிஞர்களின் நூல்களை படித்து இன்புறுவதில் விரும்பம் உடையது என்பதை காண முடிகின்றது.**

**12. புத்தகசாலை ஒன்றின் பயன்களாக கவிதையில் கூறப்படுபவை யாவை?**

**இக் கவிதையின் ஊடாக புத்தகசாலையின் வாயிலாகப் பெறக் கூடிய பயன்கள் பற்றி நோக்கும் போது,**

**→ புவியில் உள்ள இயற்கை அம்சங்களை உணர்ந்திட முடியும்**

**→ புத்துணர்வானது உள்ளத்தில் தோன்றிடச் செய்யும்**

**→ மனிதர் அன்பு நெறி காண்பதற்கு வழிவகுத்திடும்**

**→ சுயநலம் எனும் இருளைப் போக்கிடச் செய்யும்**

**→ மக்கள் தூய்மையடைந்து புதுவாழ்வு வாழ்ந்திட வழிவகுக்கும்**

**→ தேவையான நேரத்தில் தேவையான விடையத்தினை பெற உதவுவது**

# பத்தி எழுத்துக்கள் - அலகு 2

## 1. மரம் என்பது உயர்திணை

**1. மரம் என்பது உயர்திணை என்பதன் ஆசிரியர் யார்?**

→ கவிக்கோ அப்துல் ரஹ்மான்

**2. சரித்திரச் சாலையில் நிலைபெற்றுள்ள மரங்கள் எவையென பத்தியாசிரியர் கூறுகின்றார்?**

→ போதி மரங்கள்
→ அறக் குடைகள்
→ காவல் மரங்கள்
→ ஊர்ப் பொது மன்ற மரங்கள்
→ பொருட்பாலின் அத்தாணி மண்டபங்கள்
→ வசந்த மரங்கள்
→ மன்மதனின் அம்பறாத் தூணிகள்
→ கல்லால மரங்கள்

**3. மனிதன் படைத்த மரங்கள் எவையென பத்தியாசிரியர் கூறுகின்றார்?**

→ தூக்கு மரங்கள்
→ சிலுவை மரங்கள்
→கொடி மரங்கள்
→ கழு மரங்கள்
→ மாமிசப் பட்சிணி மரங்கள்
→ வெய்யிலை உற்பத்தி செய்யும்
→ மரங்கள் முட்களை கொண்ட மரங்கள்

**4. மனிதனது வாழ்க்கையில் மரம் எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றது?**

( மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை மரம் தரும் பயன்கள்)

இப் பகுதியில், மனிதனது பிறப்பு முதலாக மனிதனது இறப்பு வரையான காலப் பகுதியில் பற்பல கட்டங்களில் மரமே துணை புரிகின்றது எனலாம்.

→ குழந்தைப் பருவத்தில் தொட்டில்
→ நடை பழகும் பருவத்தில் நடை வண்டி
→ பள்ளிப் பருவத்தில் ஏடுகள்
→ மணப் பருவத்தில் கட்டில்
→ கிழப்பருவத்தில் ஊன்று கோல்
→ இறந்த பின் சிதையின் மேல் கட்டைகள்

இவை தவிர, மனிதனது வாழ்வில்,

→ மனிதனது தாகத்திற்கு பானம்
→ மனிதனது பசிக்கு உணவு
→ மனிதன் உடுக்க உடை
→ மனிதன் வசிக்க வீடு
→ மனிதன் நோய்க்கு மருந்து
→ மனிதன் பயணத்திற்கு சக்கரங்கள்
→ மனிதன் சுவாசிக்க காற்றைத் தருதல்

எனவாறு மரம் மனித வாழ்வில் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம்.

## 05. மரத்திற்கும், மனிதனுக்கும் இடையில் பத்தியாசிரியர் காட்டும் வேற்றுமைகள் எவை?

மரம் என்பது உயர்திணை எனும் இப் பாடப் பகுதியில், மரத்திற்கும் மனிதனுக்கும் இடையிலாக பத்தியாசிரியர் காட்டி நிற்கும் வேறுபாடுகளை நோக்குவோமாயின்,

→ மனிதனுக்கு மண் புதைகுழி, மரத்திற்கோ கருவறை

→ மண்ணின் மைந்தன் மனிதன் அல்லன், மரமே மண்ணின் மைந்தன்

→ பிறந்த இடத்தில் பற்று வைத்து வரவு வைப்பவை மரங்கள், பிறந்த இடத்தில் செலவு வைப்பவன் மனிதன்

→ மரம் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுற்கு வரும், மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டிற்கு செல்வான்

→ மரம் புழுதியில் மலர்களையும், கழு நீரில் கனிகளையும் தருகின்றது. மனிதனோ மலர்களில் புழுதியையும், கனிகளில் கழுநீரையும் செய்கின்றான்.

→ மரம் எல்லாம் கொடுப்பதற்காக கைகளை நீட்டுகின்றன. மனிதனோ வாங்குவதற்காக கைகளை நீட்டுகின்றான்

→ மரம் வானத்தை நோக்கி வளர்கின்றது, மனிதன் புழுதியில் புரளுகின்றான்

→ மரங்களில் எல்லாம் கொடுக்கின்ற சிபிகள், சீதக்காதிகள் ஆனால் மனிதரில் ஒரேயொரு சிபி ஒரேயொரு சீதக்காதி.

## 06. மரம் என்பது உயர்திணை என்பதை வலியுறுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள் எவை?

மரம் என்பது உயர்திணை எனும் தன் கருத்தினை உறுதிப்படுத்திட பத்தியாசிரியர் பல உத்திகளை கையாண்டுள்ளார்.

→ தானே கதை சொல்லியாக இடம்பெற்றிருத்தல்

→ சிறிய சிறிய வசனங்களைக் கொண்டதாக இடம் பெற்றிருத்தல்

→ வாசகர்களை நோக்கி வினாக்களை தொடுத்து பின் அதற்கு பதில் கூறுவதாய் அமைதல்

→ பல ஆதாரங்களை முன்வைத்திருத்தல்

→மனித வாழ்வில் மரம் பெறும் முக்கியத்துவத்தை ஆதாரத்துடன் கூறியிருத்தல்.

→ மரம் இன்றி மனிதனால் வாழ முடியாது என்பதை எடுத்துரைத்தல்

→ மரம் என்பது ஒவ்வொரு இடத்திலும் பெறும் முக்கியத்துவங்களை காட்டியிருத்தல்

→ நகைச் சுவை சார்ந்தாக கருத்துக்களை முன்வைத்திருத்தல்

→ தர்க்க ரீதியான பல கருத்துக்களை முன்வைத்திருத்தல்

## 2.மென்மையே வாழும்

**01. மென்மையே வாழும் எனும் இப் பகுதியின் ஆசிரியர் யார்?**

**→ கவிக்கோ அப்துல் ரஹ்மான்**

**02. வாழ்க்கை என்பது போராட்டம், இதில் வலிமையானவையே வாழும்.. எனக் கூறியவர் யார்?**

**→ டார்வின்**

**03. மென்மையானவையே நீண்ட காலம் வாழும் எனக் கூறியவர் யார்?**

**→ கன் ஃ பூசியஸ்**

**04. எனக்கு ஒன்றும் தெரியவில்லை, நீங்களே சொல்லிவிடுங்கள். இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?**

**→ சீடனால் குரு கன் ஃ பூசியஸ்க்கு**

**05. வாளை உருவியவன் வாளாலே சாவான், இக் கூற்றை கூறும் நூல் ?**

**→ பைபிள்**

**06. பாலைப் பண் வழிப்பறிக் கொள்ளையர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களை கீழே போட்டுவிடச் செய்யும்..**

அ. இக் கூற்று இடம்பெறும் நூல் எது?

**→ பொருநராற்றுப்படை**

ஆ. மேற்படி நூலின் ஆசிரியர் யார்?

**→ முடத்தாமக்கண்ணியார்.**

**07. போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே..**

அ. இக் கூற்றினை காப்பியம் செய்யும் நூல் எது?

**→ திருக்குறள்**

ஆ. வதன வனப்பு என்பதன் கருத்து யாது?

**→ முக அழகு**

**08. வன்மையின் வெற்றி யாது? மென்மையின் வெற்றி யாது?**

**→ வன்மையின் வெற்றி புறவயமானது,**
**→ மென்மையின் வெற்றி அகவயமானது**

**09. மென்மையே வாழும் என்பதற்கு பத்தியாசிரியர் முன்வைக்கும் கருத்துக்கள் எவை?**

இப் பகுதியில் வலிமையானவை விரைவில் அழிந்து மென்மையானவை நீண்ட காலம் வாழும் எனும் வெளிப்பாட்டினை பத்தியாசிரியர் அழகுற எடுத்துரைக்கின்றார். அதாவது மென்மையே வாழும் என்பதற்காக பல காரணங்களை அவர் முன்வைக்கின்றார்.

→ பல் வலிமையானது ஆனால் வயதானால் அது விழுந்து விடுகின்றது, ஆனால் நாக்கு மென்மையானது அது இறந்த பின்னும் அப்படியே இருக்கின்றது.

→ நீர் மென்மையானது ஆனால் அது வலிமையான அணைகளை உடுத்து விடுகின்றது.

→ நெருப்பு வலிமையானது. நீர் மென்மையானது ஆனால் நெருப்பை நீர் அணைத்து விடுகின்றது.

→ புயலினால் வலிமையான மரம் விழுந்து விடுகின்றது. ஆனால் மென்மையான நாணல் தப்பிக் கொள்கின்றது.

→காற்று மென்மையானது. ஆனால் அது புயலாக மாறினால் வலிமையானவற்றை சாய்த்து விடுகின்றது. ஆனால் காற்று அழிவதில்லை

→ வலிமையான கல்லை மென்மையான மர வேர் பிளந்து விடுகின்றது.

→ வலிமையானவர்களே போருக்கு அனுப்பப்படுகின்றனர். மென்மையானவர்கள் தப்பித்து விடுகின்றனர்.

→ வலிமை படைத்த ரவுடிகள் விரைவில் இறந்து விடுகின்றனர். மென்மையானவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள்

→ கொடிய மனம் படைத்தவர்களையும் மென்மையான இசை தன் வசமாக்கிவிடுகின்றது.

→ வன்மையான பொருட்கள் நுழைய முடியாத உடலில் மென்மையான எஸ்ரே கதிர் பாய்ந்து செல்கின்றது.

→ வலிமை படைத்த ஆண்களையும் மென்மை படைத்த பெண்கள் தம் அன்பினால் கட்டிப் போட்டு விடுகின்றனர்.

**10. தான் கூற வந்த கருத்தினை வெளிப்படுத்த ஆசிரியர் கையாண்ட உத்திகள் எவை?**

மென்மையே நீண்ட காலம் வாழும் எனும் தன் கருத்தினை உறுதிப்படுத்திட பத்தியாசிரியர் பல உத்திகளை கையாண்டுள்ளார்.

→ சீன நாட்டு அறிஞரின் கருத்துக்களை முன்வைத்திருத்தல்

→ உரையாடல் பாங்கினை கையாண்டிருத்தல்

→ இலக்கியங்களில் இருந்து உதாரணங்களை காட்டியிருத்தல்

→ வலிமையானவை மற்றும் மென்மையானவை பற்றி ஒப்பீட்டு நோக்கினை காட்டியிருத்தல்

# வாய்மொழிப் பாடல்கள் - அலகு 3

## ❁ மருத்துவிச்சி வாழ்த்து

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி
வேந்தர் மணி முடியும் கண்டீரோ தம்பி

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ

பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ

குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ

ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க

### 1. மருத்துவிச்சி வாழ்த்து என்பதன் கருத்து யாது?

குழந்தை பிறப்பதற்காக பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சி அக் குழந்தையை தன் கைகளில் தூக்கி அதனை வாழ்த்திப் பாடும் பாடல் இதுவாகும்.

**2. குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ.. இங்கு குஞ்சியாச்சி, குஞ்சியப்பு என்பதற்கு நிகராக வழங்கப்படும் உறவு முறைப் பெயர்கள் எவை?**

***குஞ்சியாச்சி – சித்தி***
***குஞ்சியப்பு – சித்தப்பா***

## 3. இப் பாடலில் மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு புலப்படுகின்றது?

இப் பாடல் வாயிலாக மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு பின்வருமாறு வெளிப்படுகின்றது.

→ குழந்தையை வாழ்த்திப் பாடும் போது குழந்தையின் தாய் தந்தையர் மற்றும் உறவினர்களை கூறி அவர்களை வாழ்த்துதல்
→ மேலும் குழந்தையின் சுற்றத்தவர்களும், அயலவர்களும் வாழவேண்டும் எனப் பாடுதல்
→ குழந்தையை உறவு முறை கூறி அழைப்பதன் ஊடாக மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு வெளிப்படுகின்றது.
→ குழந்தை நல்ல முறையில் வளர வேண்டும் என வாழ்த்திப் பாடுதல்

## 4. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகின்றாள்?

குழந்தையை கையில் ஏந்திய மருத்துவிச்சி அக் குழந்தையை புகழ்ந்து வாழ்த்திப் பாடுகின்றாள். அவ்வகையில் குழந்தை எவ்வாறு வாழ வேண்டும் எனப் பின்வருமாறு பாடுகின்றாள்,

→ மன்னர்களுக்கெல்லாம் மன்னனாக குழந்தையானது வாழ வேண்டும் எனல்.

→ மன்னர்க்குரிய மணி முடியும் பெற்று வாழ வேண்டும் கூறுதல்

→ கல்வி போதிக்கும் குருவுக்கு நல்ல பிள்ளையாக வாழ வேண்டும் எனக் கூறுதல்

→ கடவுளுக்கும் நல்ல பிள்ளையாக இருந்து வளர வேண்டும் எனப் பாடுதல்

## 5. இப் பாடலில் கிராமிய மண் வாசனை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

→ கிராமம் ஒன்றின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்கள் பாடப்பட்டிருத்தல்

→ கிராமத்தில் வாழ்பவர்கள் ஒற்றுமை கொண்டவர்களாக உறவு முறையில் பிணைப்புக் கொண்டவர்களாக வாழுதல்

→ பல உறவுமுறைகள் கூறி அழைக்கும் தன்மை காட்டப்படுதல்
உ.ம் – அப்பு, ஆச்சி, மாமன், மாமி, கொப்பர்

→ பிரசவம் பார்ப்பவர்க்கு பரிசுப் பொருட்கள் கொடுத்தல்
உ.ம் – உள்ளி, நெல், அரிசி, மஞ்சள்

→ குருவையும், இறைவனையும் மதிக்கின்ற, போற்றுகின்ற தன்மை காணப்படல்

## குறுந்தொகைப் பாடல்

முளி தயிர் பிசைந்த காந்தள் மென்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண் கண் குய்ப்புகை கழும
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது என கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே

**1. இப் பாடலைப் பாடியவர் யார்?**

→ கூடலூர் கிழார்

**2. கடிநகர் என்றால் என்ன?**

→ திருமணமான பெண் கணவனுடன் தனியாக வாழும் இடம்

**3. கலிங்கம் என்பது எதனைக் குறிக்கின்றது?**

→ ஆடை, பட்டாடை

**4. குவளை உண் கண் என்பதன் பொருள் யாது?**

→ குவளை மலர் போன்ற கண்

**5. கழும என்பது இங்கு குறிக்கும் கருத்து யாது?**

→ நிறைய

**06. இப் பாடலில் இடம் பெற்றுள்ள உவமையணிகளைக் குறிப்பிட்டு விளக்குக?**

- காந்தல் மலர் போன்ற விரல்கள்

உவமானம் – காந்தல் மலர்
உவமேயம் – தலைவியின் கை விரல்கள்
பொதுத் தன்மை – மென்மை

- குவளை மலர் போன்ற கண்கள்

உவமானம் – குவளை மலர்
உவமேயம் – தலைவியின் கண்கள்
பொதுத் தன்மை – அழகு, மென்மை

**07. தலைவியின் அழகு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?**

→ காந்தல் மலர் போன்ற மென்மையான விரல்களை உடையவள்

→ குவளை மலர் போன்ற மை இடப்பட்ட கண்களைக் கொண்டவள்

→ ஒளி பொருந்திய நெற்றியை உடைய முக அழகு கொண்டவள்

**08. தலைவன் மீது கொண்ட தலைவியின் அன்பு எவ்வாறு காட்டப்படுகின்றது?**

இப் பாடல் வாயிலாகத் தலைவி தலைவன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு பற்றிப் பின்வருமாறு நோக்கலாம்.

→ தலைவனுக்கு உணவு சமைக்க விருப்பம் கொண்ட தலைவி தனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியாது விடினும் விருப்புடன் உணவு சமைக்க முற்படுகின்றாள். அதன்படி நன்றாக முற்றிய தயிரை தன் காந்தல் மலர் போன்ற மென்மையான விரல்களால் பிசைகின்றாள் தலைவி.

→ தயிரைப் பிசையும் போது நழுவிச் செல்லும் தன் உயர்தர ஆடையை மாற்றாமல் தயிர் பிசைந்த தன் கைகளால் அவற்றைச் சரி செய்கின்றாள்.

→ இது தவிர உணவை தாளிக்கும் போது அத் தாளிப்பின் புகையானது குவளை மலர் போன்ற அவளது கண்களில் நிறைந்து வருத்துகின்றது. அதையும் பொருட்படுத்தாமல் உணவு சமைப்பதில் ஆர்வம் காட்டுகின்றாள் தலைவி.

→ மேலும் தான் சமைக்கும் குழம்பினை தானே அருகில் இருந்து துளாவிச் சமைக்கின்றாள், காரணம் அதன் சுவை மாறி விடக் கூடாது என்பதற்காக தலைவி இவ்வாறு செயற்படுகின்றாள்.

இவ்வாறு தலைவி செயற்பட்ட விதம் தலைவன் மீது அவள் கொண்ட அன்பினை எடுத்துரைக்கின்றது.

**09. தலைவியின் செயற்பாடுகளின் ஊடாக வெளிப்படும் இல்லறப் பண்புகள் எவை?**

இப் பகுதியில் தலைவியின் செயற்பாடுகளின் ஊடாக இல்லறப் பாங்கானது பின்வருமாறு வெளிப்படுகின்றது.

→ கணவன் மீது அன்பு கொண்டவளாக விளங்குகின்றாள். இது இல்லறத்தின் சிறந்த பண்பாகும்.

→ தன் கணவனுக்காக உணவு சமைக்க முற்படுதல்

→ தன் மென்மையான கை விரல்களால் தயிரைப் பிசைதல்

→ தாளிக்கும் போது அதன் புகை கண்களில் நிறைந்த போது அதைப் பொருட்படுத்தாமல் உணவு சமைத்தல்

→ உயர்தரமான ஆடை என்றும் கருதாமல் தன் அழுக்கான கையை அதில் துடைத்தல்

→ தான் சமைத்த உணவை அன்புடன் கணவனுக்குப் பரிமாறுதல்

→ கணவன் இனிது என கூறி உண்பது கண்டு மகிழ்ச்சி அடைதல்

## <u>கவிதை 2 – அமுதம்</u>

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக் கமழுதையா இதில்
அங்கமெல்லாம் மிகப் பொங்கி வழிந்திடும்
அன்பு மிகக் கலந்ததையா

கொட்டிய உப்பு கசப்பென்றாலும் உள்
கூடியினிக்குதையா இது
விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட
விண்ணின் அமுதையா

சொன்னபடி நடவாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா இது
சின்னஞ் சிறுகுழந்தை அளைந்தது
தெய்வ அமுதமையா

ஆகக் கரிந்து பொரிந்தது என்றாலுமே
அன்பு மணக்குதையா இது
வேக வைக்காதது என்றாலும் எனக்கொரு
விந்தை உருசியையா

ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு
ஓடி வருகையிலே இது
பாதி வழி வந்து தாமரைக் கை தந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினில் சுற்றிய
கட்டுப் பொதி இதையா இதைக்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாம் ஒரு
சோதி மிளிருதையா

**01 . இப் பாடலைப் பாடியவர் யார்?**

→ **சச்சிதானந்தன்**

**02. விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட
விண்ணின் அமுதமையா... இங்கு வெளிப்படும் அணி யாது?**

→ **உயர்வு நவிற்சியணி – உணவை விண்ணின் அமுதமாக உயர்த்திக் கூறுதல்**

**03. பாதி வழி வந்து தாமரைக் கை தந்த பச்சை அமுதமையா.. இங்கு
<u>தாமரைக் கை</u> என்பதில் உள்ள அணி யாது?**

→ **உவமையணி – தாமரை மலர் போன்ற கைகள்**

**04. இக் கவிதையில் மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறு புகழ்ந்துரைக்கின்றான்?**

**மனைவி சமைத்துள்ள உணவினை தலைவன் பின்வருமாறு புகழ்ந்துரைக்கின்றான்**

→ **மனைவி சமைத்த உணவு நன்றாக மணம் வீசுகின்றது எனக் கூறுதல்**

→ **அவளது அன்பு கலந்துள்ள உணவு எனக் கூறுதல்**

→ உணவில் உப்பு அதிகமாயினும் அது ஒருவித இனிமையைத் தருகின்றது எனக் கூறுதல்

→ விட்டுப் பிரிந்த வேதனையால் அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் பட்ட விண்ணின் அமுதம் எனக் கூறுதல்

→ பொரியல் நன்றாக கரிந்து போயினும் அதில் அவளது அன்பு மணக்கின்றது எனக் கூறுதல்

→ உணவு நன்றாக வேகாது இருப்பினும் விந்தையான சுவையாக உள்ளது எனக் கூறுதல்

→ சின்னஞ் சிறு கைக் குழந்தையாக தலைவி அளைந்த இவ் உணவு தெய்வ அமுதமாக இருக்கின்றது என உரைத்தல்

→ தாமரை போன்ற மென்மையான கைகளால் சமைத்த இவ் உணவு பச்சை அமுதமாக விளங்குகின்றது

→ தன் அன்பாகிய கயிற்றினால் கட்டப்பட்ட உணவு இது என கூறுதல்

→ மேலும், விண்ணின் அமுதம், தெய்வ அமுதம், விந்தையான சுவையுடையது, பச்சை அமுதம் எனவாறு புகழ்ந்துரைத்தல்

## 05. தலைவி மீது தலைவன் கொண்ட பரஸ்பர அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?

குறைகளையும் நிறைவாகக் காணுகின்ற தலைவனது மன வெளிப்பாடு தலைவியின் மீது கொண்ட அன்பினை எடுத்துரைக்கின்றது.

- உணவில் குறையிருப்பினும் அதை பலவாறாக புகழ்ந்துரைத்தல்
  உ..ம் – விண்ணின் அமுதம், விந்தை உருசி, தெய்வ அமுதம்

- சின்னஞ்சிறு குழந்தை போல் தன் மனைவியைக் கருதி அன்பு காட்டுதல்

- அன்புக் கயிற்றினால் கட்டிய உணவுப் பொதி எனக் கூறுவதன் ஊடாக தலைவி மீது கொண்ட அன்பு புலப்படுதல்

- விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்டது எனக் கூறுதல், மேலும் பாதி வழியில் ஓடி வந்து தனக்கு உணவு கொடுத்தாள் எனக் கூறுவது என்பன தலைவன் தலைவி மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகும்.

## 06. மனைவியின் சமையல் தாமதமாகி விட்டது என்பது பாடலில் வெளிப்படுமாற்றினை எடுத்துரைக்க?

ஆம். மனைவியின் சமையல் தாமதமாகி விட்டது. இதனை ஊது குழல் சத்தம் கேட்டு அவதிப்பட்டு ஓடி வருகையில் பாதி வழி வந்து.. எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன. புகையிரதத்திற்கு நேரம் ஆகி விடவே தலைவன் புறப்பட்டு விடுகின்றான். தலைவி அவன் செல்லும் வழியில் ஓடி வந்து உணவினை கொடுக்கின்றாள். இதன் மூலம் அவளது சமையல் தாமதமாகி விட்டது என்பது புலப்படுகின்றது.

## 07. குழந்தை மீது தந்தை கொண்ட அன்பின் வெளிப்பாடு பாடலில் எவ்வாறு புலப்படுகின்றது?

இப் பாடலில் தலைவன் தன் தலைவியை ஓர் குழந்தையாக கருதி அவள் சமைத்த உணவின் தன்மைகளை புகழ்ந்துரைக்கின்றான்

சொன்னபடி நடவாத துடிப்பயல் தொட்டுச்சுவைத்ததையா இது
சின்னஞ் சிறுகுழந்தை அளைந்தது தெய்வ அமுதமையா..

எனும் பாடல் வரிகள் இதற்கு சான்றாகும். ஆம். சொன்ன சொல் கேளாது துடிப்புடன் சின்னஞ் சிறு கைக் குழந்தை தொட்டு அளைந்து சமைத்த உணவு இது என தலைவன் கூறுகின்றான். இருந்தாலும் அது தெய்வ அமுதம் போன்று உள்ளது எனத் தலைவன் கூறுவது குழந்தை மீது ஓர் தந்தை கொண்ட அன்பின் வெளிப்பாடான இங்கு காண முடியும்.

## 05. அமுதம் எனும் தலைப்பு இக் கவிதைக்கு பொருந்துவதை எடுத்துக் காட்டுக?

இக் கவிதைக்கு அமுதம் எனும் தலைப்பு மிகப் பொருத்தமானதே. ஏனெனில் மனைவி சமைத்த உணவை கணவன் புகழ்ந்துரைக்கும் போது பல இடங்களில் அமுதம் எனக் குறிப்பிடுகின்றான். குறிப்பாக அமுதம் என்பது தேவர்களின் உணவாகும். அது மானிடர்க்கு கிடைப்பது அரிதாகும். ஆனால் மனைவி சமைத்த உணவு அமுதம் போன்று இருப்பதாக தலைவன் உரைப்பதனாலும் இக் கவிதைக்கு அமுதம் எனும் தலைப்பு பொருந்தமானதே எனலாம்.

## 06. பின்வரும் தொடர்களில் உள்ள இலக்கியச் சிறப்பினை விளக்குக?

- <u>விட்டுப் பிரிகையில் சொட்டுக் கண்ணீர் பட்ட விண்ணின் அமுதமையா..</u>

இவ்வடிகளில் வெளிப்படும் இலக்கியச் சிறப்பினை நோக்கும் போது, தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றமையால் அப் பிரிவுத் துன்பம் தாங்காமல் தலைவியின் கண்கள் கண்ணீர் சொரிந்தன. அந்தக் கண்ணீர் துளிகள் சமைத்த உணவினில் விழுகின்றது. ஆகையால் அந்த உணவு விண்ணின் அமுதமாகப் படுகின்றது தலைவனுக்கு. இங்கு விண்ணின் அமுதம் என்பதில் உயர்வு நவிற்சியணி புலப்படுகின்றது.

- <u>பாதி வழி வந்து தாமரைக் கை தந்த பச்சை அமுதமையா...</u>

இவ்வடிகளில் புலப்படும் இலக்கியச் சிறப்பினை நோக்குமிடத்து, தலைவன் நேரம் சென்றமையால் விரைந்து சென்று விடவே தலைவி பாதி வழியில் ஓடி வந்து தான் சமைத்த உணவைத் தன் தாமரை மலர் போன்ற கைகளால் தலைவனுக்க கொடுக்கின்றாள். இங்கு தாமரை மலர் போன்ற கைகள் என்பதால் தலைவியின் கைகளின் மென்மை உவமையணியின் மூலம் காட்டப்பட்டுள்ளது.